இலையுதிர் வசந்தம்



03
2
1991
1437
JPL
C1437

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையுதிர் வசந்தம்

விவேக்

03 1991
KOHA JPL
84156
84156 C.C

மணி ஓசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ILAIUTHIR VASANTHAM'
Collection of poems by Vivek.
First Edition September 1991.
Published by 'Mani osai' Jaffna.

894.8111

☐ இலையுதிர் வசந்தம்
கவிதைத் தொகுதி

☐ விவேக்

☐ முதற் பதிப்பு செப்ரெம்பர் 1991

☐ மணி ஓசை வெளியீடு

☐ அச்சுப்பதிவு: மணி ஓசை அச்சகம்,
12, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

☐ அட்டைப் பதிவு,
லக்ஷ்மி அச்சகம், யாழ்ப்பாணம்.

☐ விசேட பதிப்பு

☐ விலை: 30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையாத்தலும், கவிதா ரசனையும்
சுயானுபவங்களே.
இவற்றை விளக்கிடமுயலும்
எந்த வார்த்தைகளும் வரிகளும்,
தத்தம் பணியில் தோற்றே போகும்.

நாட்டில் நடந்து கொண்டிருக்கும் நாசகாரச் செயல்கள் இவர் மனதை பாதிக்கின்றன. உலுப்பி எடுக்கின்றன.

பாரதியின் ஊழிக் கூத்து போல போர்க்கால ராகங்களை உணர்ச்சி நரம்புகள் மீட்ட ஆரம்பிக்கின்றன.

கலை பிறக்கிறது

இக் கலையின் வடிவுறு தன்மைகளை கலைஞனை முந்தி அவன் பார்க்கும் காட்சிகளும், பாதிப்புகளுமே நிர்ணயிக்கின்றன.

உண்மையான எந்தக் கலைஞனும் கலை வடிவத்தை வைத்துக் கொண்டு கருத்தைத் தேடுவதில்லை. அதே போல் மொழியையும் தேடுவதில்லை.

KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி கைகட்டி சேவகம் செய்யும். புதிய புதிய சொற் பிரயோகங்கள் சொல்லாக்கங்கள் உருவாகும்.

இவையே கலையை உயிர்த்துவமாக்கும். ஏன் 'கலை' என்று அப்போதுதான் உணர்த்தப்படும்.

இவற்றிற்கு இன்றைய சூழலில் 'தளைகளற்ற கவிதைகள்' பெரிதும் கை கொடுக்கின்றன.

கவிஞனின் மன உணர்வுகள் பாதிப்படையும்போது இயற்கையும், இயற்கை வழங்கி வந்த உயர்ந்த பண்பார்ந்த உவம, உருவகப் படிமங்களெல்லாம் விகாரமடைகின்றன.

இலக்கண அணி மீறிய தோற்றம் கொண்டு 'துரோக நிலவு' 'கோர முகம் காட்டும் நிலவு' 'தோட்டாக் குருவிகள்' 'விசும்பலாய் ஒலி செய்யும் வாய்க்கால், என்றாகின்றன.' ஹைக்கூ, கவிதைகளும் இதற்கு கைகொடுக்கின்றன.

'இலையுதிர் வசந்தம்' என்னும் புத்தகத் தலைப்புக் கவிதையே கவிஞனை நன்கு அறிமுகம் செய்யும்.

கவியாத்தலும், கவிதாரசனையும் சுயானுபவங்களே. இவற்றை விளக்கிட முயலும் எந்த வார்த்தைகளும், வரிகளும் தத்தம் பணியில் தோற்றே போகும்.

செம்பியன் செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

ஒரு நிமிடம்...

'இலையுதிர் வசந்தம்' எனது இரண்டாவது கவிதைத் தொகுதி.

'தடயங்கள்' வெளியாகி சுமார் மூன்று வருடங்களின் பின் என் கவிதைகள் மீண்டும் தொகுப்பாகின்றன.

கவிதை எழுத வேண்டுமென கருவைத்தேடி மனம் அலைந்ததில்லை.

'கரு உருவானதும் வார்த்தைகள் வந்து மனதில் நிற்கின்றன.

இவை அவ்வாறு உருவான கவிதைகளே!

சமகாலத்தில் ஏற்பட்ட அனுபவங்கள், பாதிப்புகள், தாக்கங்கள் ஆகியவற்றின் விளைவுகள்!

அனல் பறக்கும் வரிகளை இதற்குள் எதிர்பார்ப்பவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

இதற்குள் எந்தவிதமான பொய்மையோ, போலித்தனமோ இல்லை என்பதனை மட்டும் அழுத்தமாக பதிவு செய்ய விரும்புகிறேன்.

இங்கு சில காதல் கவிதைகளும் பதிவாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால நிகழ்வுகளைக் காதல் கவிதைகளூடாக சொல்வதில் ஒரு நெருடல் இருப்பதாக உணர்கிறேன்.

மண்ணை, மக்களை நேசிக்கும் சமூகப்பிரக்ஞையுள்ள ஒருவனுக்கு காதல் மட்டும் அந்நியப்பட்டுப் போய்விடுவதில்லை.

இடிபாடுகளிடையே இடிந்து சிதைந்து போனவைவெறும் உடல்களும் உடைமைகளும் மட்டுமா?

வீழ்ந்த இதயங்கள் இங்கே விசாரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கவிதைகளில் உள்ள ஓரிரு வரிகளேனும் வாசிப்பவர் இதயங்களின் ஆழத்தை வருடுமாயின் அதில் நான் வெற்றிபெற்றவனாவேன்.

வெறும் கரகோஷங்களில் காணாமல் போகிறவனல்ல கவிஞன்.

அன்புடன்
விவேக்
10 – 09 – 1991

தொடர்பு முகவரி:-
மே / பா. மணி ஓசை,
இல. 12, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாய் எழுதல்

புயலடித்து தணிந்திருந்த
ஓர் மௌன அதிகாலை
துயர் சுமந்த நெஞ்சினொடு
நடந்தேன்.

என் கிராமத்து வாசலில்
பட்டமரக் கிளையொன்றில்
துணை பிரிந்த குயிலொன்று
சோகம் பாடியது.

விதவைப் பெண்ணொருத்தியின்
விசும்பலாய் ஒலி செய்து
மெலிந்து நடந்தது வாய்க்கால்.

விழுந்து கிடந்த
வேப்பமர இலைகளின்
புருவங்களில்
இரத்தக்கறை.

இடிபாடுகளிடையே
முதுகு முறிந்த
பெருமரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றல் மட்டும் வந்து
தோழனொருவனாய்
தோள் தொட்டு வருடியது.

அக்கம் பக்கம் எவருமின்றி
அநாதரவாய்
அகதியாய்
எனது கிராமம்!

புதைவுகளுக்குள்ளிருந்து
சில தளிர்கள் தனியே
பூத்திருந்தன.

ஆர்வத்துடன் நோக்கிய
என்னுடன் அவை பேசின.

சிதைவுகளுக்குள்ளிருந்து
புதிதாய் எழுதல் பற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடு

ஆழ் மனதில் வேரூன்றிவிட்ட
அடர்ந்த காடுகள்
அந்த பசிய மரஞ்செடி கொடிகளிலெல்லாம்
அவன் காதலின் பதிவுகள்.

வண்ண மலரினங்கள் சொன்ன
வாசக் கவிதைகளில் நனைந்த
எண்ணங்களில் இன்னும்
ஈரமிருக்கின்றது.

காற்றின் பாடலுக்கு
மரங்கள் இசையமைக்க
கைதட்டி ரசிக்கும் இலைகள்.
விழா நடாத்தி
விமர்சனம் செய்யும்
குருவிகள்.

அந்த
பசிய மரஞ்செடி கொடிகளிலெல்லாம்
அவன் காதலின் பதிவுகள்.

களத்திலிருந்து திரும்பும் அவனுக்கு
களைப்பாற பாய்விரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுப்புண்களுக்கு
வீரிய மருந்தாகும்.
சாய்ந்திருக்க சாமரம் வீசும்.
அந்த மரஞ்செடி கொடிகளிலெல்லாம்...

பெண்ணே!
ஓர் மின்னல் இடைவெளியில்
கானகத்தைப்பிரிந்து
வந்திருக்கிறான்
உன் காதலன்.

இதழ்கள் மௌனத்தை
கொஞ்சம் ஒத்திவைக்கட்டும்

தாமதித்தால்
பின்பு வருந்தநேரும்.

இந்த நிமிடங்களின் கரைவும்
இந்த இடைவேளையின்
இடைவெளிகளும்
அவனுக்கு மட்டுமே புரியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரம்

நம் நகரவீதிகளில்
இயந்திரத்தனமாய்...
இங்குமங்குமாய்...
அலைந்து திரியும் கால்கள்
ஆயிரமாயிரமாய்!

கண்ணிமைக்கும் நேரம்
எங்கிருந்தோ பறந்துவரும்
தோட்டாக் குருவிகள்
அகப்பட்ட உடல்களுள்
கூடு கட்டும்.

துடிக்கும் உடல்கள்
தூரிகையாகி
பூமி ஏட்டில்
நவீன சித்திரம் வரையும்.

உடனே—
இயந்திரக் கால்களுக்கு
இறக்கைகள் முளைத்துவிடும்
சிலநிமிடங்கள் தான்

84156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்
இயந்திரத்தனமாய்
இங்குமங்குமாய்...

□

பதவிகளில்
பார்வையைத் தொலையவிட்ட
விழிகள்
பத்திரிகைகளில் மட்டுமே
அவலங்களைப் பார்க்கும்.

சேதங்கள் பற்றிய
செய்தி கேட்டு
பல விழிகளில் நதிகள்
விரைந்தோட
சில மான்விழிகள்.
உறவாட மொழிதேடும்.

□

வீதிகளில் நிற்கும்
வெறுப்பான முகங்களால்
விலகிச்செல்லும்
சில மனங்கள்.
முகம் பார்த்து
புன்னகைப் பூக்களை
தூவிச் செல்லும்
சில 'மரங்கள்'

தளிர்களைக் காக்க
முள்வேலியாகும்
சில கரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலியைப் பிரித்து
வேடிக்கை பார்க்கும்
வானரங்கள்.

தினசரிப் பார்வையில்
இவையெல்லாம் சித்திரங்கள்
ஆனாலும் யாவுமே
விசித்திரங்கள்!

●

*இந்திய இராணுவம் இங்கிருந்த காலம்.

84156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு

இருளை விரும்பும் உயிர்.
காற்றின் அலைதலைக் கூட
கணக்கெடுக்கும் காது.
விழிகளைப் போர்க்க
இமைகள் மறுக்கும்.

வானில் பெரிதாய்
கோரமாய்
முகம் காட்டும்
அந்த நிலவை
கல்லெறிந்து உடைக்க முடியுமா?
மனம் வெறுக்கும்.

சிரச்சேதம் செய்யப்படும்
கைதிகளை
வேடிக்கை பார்த்து
வியக்கும் சனக்கூட்டமாய்
நட்சத்திரங்கள்!

தலைவிரி கோலத்தில்
தள்ளாடும் பனைமரங்கள்.

84156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ–
குடிசைப் போர்வைகளுக்குள்
புழுக்களாய் நெளியும்
உயிர் சுமந்த உடல்கள்.
மரண அறிவித்தல்
காதுகளுள் குறுகுறுக்கும்

இரவின் அமைதி
திடுமென கலையும்.

துரோக நிலவின்
காட்டிக் கொடுத்தலில்
இயந்திரப் பறவைகள்
இரை தேடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகள்

மனதிற்கு சிலநேரம்
சிறகுகள் முளைக்கும்
வான் பறவை வியூகத்துடன்
அதுவும் கலக்கும்.

திடீரென சிறகுகள் அறும்
மனம் மண்ணில் விழும்.
உடலுக்குள்
சுமையாகும்.
வானை அண்ணாந்து பார்த்து
சோர்வுறும்.

அந்தப் பறவை அணியோ
சிதறாமல் தொடரும்.

பரந்த வெளிகளில்
பாடிப்பறந்து...
பச்சைக் கிளைகளில்
ஊஞ்சலாடி...
மகிழும் அவை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுள் பயம் வாழ
பிணமாய் நடமாடும்
பிறவியை என் சொல்வேன்...

ஒளிந்து கொள்ள
இடம் தேடித்தேடி
பாதைவழியே
பயணம் நடக்கும்.
அந்தப் புள்ளினமோ
பயமின்றி வாழும்.

உடல் பதற
ஓடிச்சென்று
பற்றைக்குள் பதுங்கும் போது
அவை
பயத்தில் பறக்கும்
என்னைப் பார்த்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம்

காத்திருக்கிறேன் ஓர்
காலைப் பொழுதிற்காய்
நிலவுக்கென்ன...
வரும் போகும்
ஞாயிறின்றி
பகல் என்பதில்லை.

கருகி மண்ணில் வீழ்ந்து
மீண்டும் எழுந்து பறக்கும்
பீனிக்ஸ் மனம்.

அந்நிய புல்வெளியில்
ஆசைகள் வளர்த்து நீ
காத்திருக்கிறாய்.

இங்கோ
மனிதம் மரணித்துப் போனதால்
மரணங்கள் மலிந்து போயின.
மனதில்–
குட்டிகளீன்று பெருகிவாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றிக் கூட்டமாய்
சோகங்கள்.

நம் பசும்புல்வெளியோ
சருகாய்ப்போனது
பாதங்களோ
முட்களின் மீதே!

ஆனாலும் உணர்கிறேன்
நம்பிக்கையின் வேர்களில்
இன்னும் பச்சை இருக்கிறது.

உன்பார்வையின்
பொருள் அறிந்தும்
புரியாததுபோல்
பாவனை செய்து
உன்னுடனான
என் மாலைப்பொழுதுகளையும்
ஒத்திவைத்து-

காத்திருக்கிறேன்!

---

*1988 - ம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பு

கால்கள் பதிக்க
இடமில்லை.
நிலத்தில்
அருவருப்பாய் பரவும்
பூச்சிகள்.

கால்கள் பதிக்க
இடமே இல்லை.

வானில் பறந்தவை என்ன...
வண்ணத்துப் பூச்சிகள்தானா?
வாக்குறுதிகள்
மதிற்சுவர்களில் மட்டுமே
வாழ்ந்தன.

வலை வீசியதும்
விலை பேசியதும்
வரலாற்றின் துரோக பக்கங்கள்.

சுவாசத்தை சுகப்படுத்த
வந்தவனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சுக் காற்றால்
இங்கு தென்றல் கூட
விஷமானது.

அந்நிய தெருக்களில் நான்
அலைந்து திரிகிறேன்.
முட்களின் மீதே
நிதம் துயில்கிறேன்.

மின் விசிறியும்
குளிரூட்டியும்
என் கிராமத்து வேப்பங்காற்றுடன்
தோற்றுப்போகும்.

மனிதம் துளிர்க்கும்
மறுபடியும் அங்கு செல்வேன்.

இருள் மனக்காட்டுக்குள்
இன்னும் கூட
நம்பிக்கை மின்மினிகள்.

*1988 – ம் ஆண்டு கொழும்பில் தங்கியிருந்தபோது எழுதியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் கோரம்

என்றுமில்லாதவாறு
இந்த மண்ணை
வறட்சிக்கரங்கள்
ஆக்கிரமிக்கும்.

எதிரியின் இதயமாய்
ஈரமற்று வெடிக்கும்
நிலம்.

வியர்வைத்துளிகளையே
வேர்கள் குடித்து
வளரும்.
பசித்த வயிறுகளுக்கும்
பஞ்சடைந்த விழிகளுக்கும்
பச்சைத்தளிர்கள் கொஞ்சம்
உயிர்ப்பூட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையுதிர் வசந்தம்

பருவம் தவறிய மழை
துரோகம் புரிய
மீண்டும் நம்பிக்கை தீர்ந்து
வெறுமை பெறும் இதயம்.

அலரி மரங்கள் மட்டும்
பிஞ்சும் காயுமாய்
பூத்துக் குலுங்கும்!

●

---

*பொருளாதாரத் தடையுடன் இணைந்த வறட்சியினால் வன்னியில் பலர் பட்டினியில் அலரிக்காய் உண்டு தற்கொலை செய்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைகள்

என் இனியவளுக்கு
விரைவில் நான்
விடுதலையாவேன்.

ஐந்து ஆண்டுகள்
ஆயிரம் யுகங்களாய் கழிய
அன்றுதான் அமைதிகிடைத்ததா
என்னைப்பார்க்க...

அதுவே நம்
இறுதி சந்திப்பு.

இடையே
இரும்புக்கம்பிகள்
எதிரே நின்றது நீதானா?

இரண்டு சூரியன்களை
ஏந்திய நிலவுமுகம்
இடிவிழுந்த நிலமாகி...
என்னால் நம்பவே முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தான் இங்கே
நான்கு சுவர்களுக்குள்
நசிந்து கிடக்கிறேன்
உனக்கென்ன நடந்தது?

ஓ! நம் தேசமே
ஓர் சிறைதானே.

அதற்குள்ளே நீ
அலைக்கழிக்கப் பட்டிருக்கலாம்
வெறி கொண்ட மிருகங்களால்
வேட்டையாடப்பட்டிருக்கலாம்.

என்னிடம் நீ
பேசவே இல்லையே!

இதழ்கள் மௌனம் செய்து
சொல்ல மறுத்த சோகத்தை
விழிகள் சொன்னபோது
இரண்டாய் பிளந்தது
என் இதயம்.

இருவருமே கைதிகள்தான்
சிறைகள் தான் வேறு வேறு!

இங்கிருந்து விடுதலையாகி
இன்னொரு சிறையில் உன்னை
சந்திக்கமாட்டேன்.

நான் சிதைக்கப்பட்டுள்ளேன்.

விரைவில் நான் விடுதலைபெறுவேன்
மரணத்தின் மூலம்.

* பூசா முகாம் கொடுமைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகள்

இமைக்கதவுகள் மூடி
சற்று ஓய்ந்திருக்கும் வேளைகளில்
உன்மனதிலிருந்து
ஒவ்வொன்றாய்
ஊர்வலம் போகும் ஞாபகங்கள்.

அந்த அணிவகுப்பின்
இடையிடையே
நீயும்.

இங்கொன்றும் அங்கொன்றுமாய்
என் மேசையில்
சிதறிக்கிடக்கும் புத்தகங்களை
நீ அடுக்கி வைத்ததும்...
அழகு பார்த்ததும்...

கொஞ்சம் அழுததும்
மெல்ல சிரித்தும்
என்னைக் குழப்பி
வேடிக்கை பார்த்ததும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவைப்பற்றி
பேசுவதற்காகவே
அடிக்கடி சந்தித்துக்கொண்டதும்.

சந்தோஷமாக
பொய்கள் பேசி
மகிழ்ந்ததும்...

காலச்சரிவிலும்
புதையாத நினைவுகள்.

ஓர் நாள்...
காலத்தின் அழைப்பால் நானும்
காலப்புயலால் நீயும்
காணாமல் போனோம்.
அதன் பின்
யாருக்கும் தெரியாமல்
ஓரிரு தடவைகள்
சந்தித்துக் கொண்டோம்!
(பெற்றோர்க்குப் பயந்து அல்ல)

ஞாபகங்கள் மட்டும்
என்னுடன்
வாழ்கின்றன.

இப்போது நீ
எங்கிருக்கிறாய்
என்ன செய்கிறாய்
எதுவுமே அறியேன்.

எப்போதாவது
என் கவிதைகளைக் படிக்க நேர்ந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேக

அப்போது நானுந்தன்
ஞாபகத்தில் வந்தால்
எனக்கோர் மடல் எழுது.

உனதும்
உன் துணைவனதும்
உன் பிள்ளைகளினதும்
சுகங்கள் குறித்து!

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையுதிர் வசந்தம்

ஓர் நாளில் மலர்ந்து சிரித்து
அன்றே உதிரும் பூக்கள்.

இரவெல்லாம்
இலை மீது துயின்று
விடிகலில் மறையும்
பனித்துளிகள்.

நிலவை விரும்பும்
மரங்களின் கரங்கள் சூழும்.
ஓர் நாள் புயலில்
ஒடிந்து விழும்.

கூடிழந்த பறவைகள்
ஓடும்.

செடிகளின் சோகம்
தொடர்வதில்லை
பூக்கள் மீண்டும் சிரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைகள் இரவில்
தனிமை கொள்வதில்லை
துணைவரும்.

மரக்கிளைகள்
துளிர்விடட்டும்
பறவைகள் வந்தமரும்.

உறவின் பிணைப்பை
உணர்த்தவே பிரிவுகள்.

இரவின் இருள் அழகை
மின்னல்தான் அறிவிக்கும்.
சப்தம்
அமைதியின் ஆழத்தைச் சொல்லும்.

இந்த வீழ்ச்சிகள் யாவும்
எழுவதற்கானவை.
புதுப்பித்தலுக்கான
தேய்வுகள் இவை.

இயற்கை யோடிணைந்தேயமர்.

இலைகள் உதிரினும்
இதுவே வசந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பு

நிலவொளி படராத
மௌன இரவுகள்
மனங்களில் பயத்தினை விதைக்கும்.

குப்பி விளக்குடன் போராடி
உன் விழிகள்
கரையும்.

கட்டப்பட்ட மாடு போன்று
வட்ட எல்லைக்குள் உன்
மேய்ச்சல் தொடரும்.

கீறல் விழுந்த இசைத்தட்டாக
பாட வரிகள்
பதியும் மனதில்.

தொலைவில் ஏதோ
ஓசைகள் கேட்க
அம்மா உன்னை
அதட்டுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகவரிகளுள்
புதைந்து போனதில்
உன்
காதுகள் கூட
காணாமல் போயிருக்கும்.

அந்த இரவில் -
உனது பள்ளிக்கூடம்
தகர்க்கப்பட்டிருக்கும்.

அந்த இரவு-
உன் நண்பர்கள் இருவர்
தொலைந்து போயிருப்பர்.

அன்றிரவு -
உன் பரீட்சை கூட
தடை செய்யப்பட்டிருப்பதாக
அறிவிக்கப்பட்டிருக்கும்.

அடுத்த நாள்
பகலுக்குப் பிறகே
இவை உனக்குத் தெரியவரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம்

● காணகத்துள் மாநாடு நடக்கும்
பேச்சுவார்த்தைகள் நடாத்தும்
துப்பாக்கிகள்.

● இரவு வந்து நிலவும் வந்தது.
அவன் மனம் குளிரவில்லை
எதிரியைக் காணோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேக்

காயமுற்று கட்டிலில் கிடந்தவன்
தூக்கமின்றி நெளிந்தான்

கனவே சுகம்.

● களத்திலாடி கரங்களை இழந்தவன்
கனவிலும் யோசித்தான்
''கால்களால் இயக்கும் ஆயுதமிருந்தால்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெடிகுண்டு சுமந்து புகுந்தனன்
  பகைமுகாம் சிதற துாள்களாய் அவனுடல்
  ஓ! மரணமும் அழகிய கவிதையே.

- எண்மர் நடந்தனர் முன்னே
  குண்டெதிர் கொண்டு சாய்ந்தனர் ஐவர்
  அவ்வுடல் கடந்து தொடர்ந்தனர் மூவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ''சென்று வருகிறேன்''
எல்லையற்ற மகிழ்வுடன் விடைபெற்றுக் கொண்டான்
கருப்புலி.

● மரணித்த பின்பும்
கரங்களுக்குயிருண்டோ?
ஆயுதம் ஒப்படைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● உயிர் விட்ட பின்பும்
தோழனுக் குதவினான்
காப்பரணாகும் உடல்.

● முறிந்த கைகளில்
விரல்களைத் தேடுனான்
வீழ்த்திய பகைவரை கணக்கிட!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பிகள்

காலத்தால் செதுக்கப்பட்ட
சிலைகளல்ல இவர்கள்
ஒரு காலத்தை செதுக்கிய
சிற்பிகள்!

காற்றுக்கும் திசையினை
கற்றுக்கொடுப்பவர்கள்.
கனவுகள் இவர்களுக்கில்லை
இவர்களே எதிரியின் கனவுகள்.

சூரியன் வந்து சுடுவதில்லை
வெப்பம் இவர்கள்
விழிகளின் உருவாக்கம்.

கட்டுமரங்களே கூரை
மண் மேடுகள்
மலரணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையுதிர் வசந்தம்

பனியில் குளிரெடுத்தால்
பகைவனில் பீரங்கிகளை எரித்தே
குளிர் காய்வர்.

எதிரியின் எல்லைகள்
இவர்களின்
விளையாட்டுத் திடல்கள்.

எதிர்கொள்ளும் நிமிடங்கள்
திருவிழாக்கள்
போரிடும் இரவெல்லாம்
தீபாவளிகள்.

மரணம் இவர்களை
தொடுவதற்கஞ்சும்.
கால்களில் வீழ்ந்து
மண்டியிடும்.

கரங்களில் இருப்பது
துப்பாக்கிகள் அல்ல
வரலாற்றின் நெம்புகோல்கள்!

●

84156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிகள்

இக் கவிதைகள்
சிலவற்றிற்கு
களம் தந்த

வீரகேசரி
முரசொலி
மல்லிகை
சாளரம்

ஆகியவற்றிற்கும்;

இத்தொகுப்பு
உருவாக துணை நின்ற,

மணி ஓசை
ஜோசப் பாலா
முன்னுரை தந்து
சிறப்பித்த
திரு. செம்பியன் செல்வன்
மற்றும், நண்பர்கள்

அனைவருக்கும்,

84156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

......Reconizably immediate and truly partisan towards the Tamilian viewpoint in the socalled 'Ethnic crisis', these poems are remarkably sincere in tone.

......He has immense potential to turn out tobe one of the finest poets in Tamil. He has the poetic sensibility, what he needs perhaps is experience, balance and maturity.

K. S. Sivakumaran
The Island
20-4-1988.

மணி ஓசையின் முதலாவது வெளியீடாக வரும் 'விவேக்' இன் 'இலையுதிர் வசந்தம்' கவிதையுருவில் சம கால நிகழ்வுகளை உங்கள் மனப்பரப்பில் பதிவு செய்கின்றது. இது, காலக் கண்ணாடியாகத் துலங்கும் என்பதில் ஐயமில்லை.

மணி ஓசை வெளியீடுகள் தொடர்ந்து, தரமான படைப்புக்களால் வாசகர் நெஞ்சங்களை நிறைவு பெறச் செய்யும் என நம்பிக்கை தெரிவிக்கின்றோம்.

மணி ஓசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org